தமிழ் உருபனியலும் தெ.பொ.மீ-யும்
(TPM and Tamil morphology)

இராஜேந்திரன் சங்கரவேலாயுதன்
rajushush@gmail.com

பிறப்பு

தெ.பொ.மீ. அண்மையில் இறுதியை எய்திய இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இரண்டாயிரத்தில் கால் பதித்துள்ள நாம் முந்தைய நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்து தமிழ் மொழிக்கென்று தன் வாழ்வை அர்ப்பணித்து சாதனைகள் படைத்துள்ள தெபொமீ அவர்களின் மொழியியல் கருத்துக்களை நினைவுகூர்ந்து அவர் விட்டுச்சென்ற இடத்திலிருந்து ஆய்வை மேலும் தொடர முனைப்புகள் செய்ய வேண்டிய கடமை உணர்வில் உள்ளோம். உருபனியல் குறித்த அவர் கருத்துக்களை ஆய்ந்து மேலும் உருபனியல் ஆய்வு எவ்வாறு நடைபெற்று வருகிறது, எவ்வித ஆய்வுகள் மேலும் மேற்கொள்ள வேண்டும் என்பதை இங்கு ஆய உள்ளோம். உருபனியல் பற்றிய தெபொமீயின் கருத்துக்கள் ஆங்காங்கே அவர் எழுதிய கட்டுரைகளிலும், நூல்களிலும் சிதறிக்கிடக்கின்றன. இக்கருத்துக்கள் யாவற்றையும் ஒருங்கிணைத்து உருபனியல் பற்றி அவருக்கிருந்த கருத்துக்களை வெளிக்ககொணர்வது இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகின்றது.

வாழ்நாள்

தமிழ் மொழியியல் வரலாற்றில் தெபொமீ

தெபொமீயின் உருபனியல் கருத்துக்களை தொகுத்துக் கூறுவதற்கு முன் தெபொமீ எந்தக் காலகட்டத்தைச் சார்ந்தவர், அவர் மொழியியல் பின்னணி என்ன என்பதனை அறிந்து கொண்டால் அவர்தம் கருத்துக்களின் ஆழத்தை அறிந்து கொள்ள வசதியாய் அமையும். தெபொமீ அண்மையில் நம்மை விட்டுச்சென்ற நூற்றாண்டைச் சார்ந்தவர். அவர்தம் மொழியியல் கட்டுரைகள் யாவும் 1937-இல் தொடங்கி 1979 வரை எழுதப்பெற்றவை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பகுதிவரை மொழியியலைக் கோலோச்சிக் கொண்டிருந்த அமைப்பு மொழியியல் நிச்சயமாக அவர் மொழிக் கருத்துக்களைப் பாதித்திருக்கும் என்பதை ஐயமின்றி அறுதியிட்டுக் கூறலாம். அவர் கட்டுரைகளில் அவர் காட்டியுள்ள நோக்கீட்டுநூல்கள் இதை உறுதிசெய்யும். இவர் பூஸூரம்பீல்டு, ∴பூலர், சாவோ, சசூர், பிர்த், கார்டினர், க்ரா∴ப், க்ரோட், கிரீன்பெர்க், ஹால், டிராகர், ஹாரிஸ், ஹாக்கெட், ஹவுஸ்ஹோல்டர், யாக்கோப்ஸன், ஜோன்ஸ், ஆக்டன், ரிச்சர்ட்ஸ், ரோஸட், சபீர், உல்மான் ஆகியோரின் கட்டுரைகளையும் நூல்களையும் நோக்கீட்டுகளாக தன் கட்டுரைகளிலும் நூல்களிலும் குறிப்பிட்டுள்ளார். மட்டுமல்றி

இவர் மரபிலக்கணங்களையும் நோக்கீட்டுகளாக் குறிப்பிட்டுள்ளார். இவர் எழுதிய கட்டுரைகளும் நூல்களும் அன்றைய காலகட்டத்திலிருந்த மொழியியல் கருத்துக்களைப் பிரதிபலிப்பதோடு இவர் மரபிலக்கணக் கொள்கைகளையும் கருத்தில்கொண்டு ஆய்வு முடிவுகள் எடுக்கிறார் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

சொல் விளக்கம்

அமைப்பு மொழியலார் சொற்களின் உள்ளமைப்பை ஆய்வதை உருபனியல் என்றனர். அமைப்பு மொழியியலார் பார்வையில் சொல் தான் உருபனியல் ஆய்வின் மேலான அலகு. சொல்தான் உருபுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் வருகைமுறை வர்ணனைக்குள்ளாகின்றது. எனவே சொல்லுக்குப் பொதுவான ஒரு வர்ணனை தர மொழியியலார் முயன்றனர். பொதுவயாக எல்வா மொழியினரும் சொல் என்ற அலகு தத்தம் மொழிகளில் இருப்பதாகவே நம்புகிறார்கள். ஆனால் சொல் என்பதற்கு ஒரு பொதுவான வர்ணனை செய்ய நாம் முயலுகையில் பெரும்பாலும் அம்முயற்சி பலிப்பதில்லை. மார்ட்டினெட் (1964) சொல் என்பதை வர்ணனை செய்வதே பயனில்லாத ஒரு முயற்சி என்கிறார். அவர் சொல்லை வர்ணனை செய்வதைவிட சொல்லைக் கண்டுபிடிப்பது எளிது என்கிறார். ஒரு குறிப்பிட்ட மொழியின் சொல்லை ஒலியனியல் அடிப்படையிலும் உருபனியல் அடிப்படையிலும் வர்ணனை செய்ய இயலும். தெபொமீ தமிழ்ச் சொல்லை வரையறை செய்கையில் சொல் குறித்த மொழியியலாரின் பல்வேறு கருத்துக்களைப் பட்டியலிட்டு விளக்குகின்றார். சபீர் வாக்கியத்தின் முழுப்பொருளைத் தீர்மானிக்கும் முழுவதும் திருப்திகரமான தனித்து பொருள் தருகிற சிறிய துண்டுகளில் ஒன்று தான் சொல் என்பார். இந்த வரையறை பயன்படுத்தத் தக்கதல்ல ஏனென்றால் சபீர் பயன்படுத்தியுள்ள 'திருப்தி' என்பததை அளவிடுவது கடினமான செயலாகும். பளூம்பீல்டு சொல் என்பதை குறைந்த அளவிலான கட்டில்லா வடிவம் என்பார். இந்த வரையறை ஓரளவுக்குப் பயன்பட்டாலும் கட்டில்லாமை என்பது தனியாக கூற்றுப்போல் வருவது என்ற பொருள் பெறுவதால் சார்ந்து வரும் சொற்களான the போன்ற சொற்களைச் சொல்லாகக் கொள்ள இயலாது போகும். The mayer of Boston's daughter அல்லது twenty eighth என்பனவற்றை சொற்களாகக் கொள்ள வேண்டிவரும். தெபொமீ தமிழில் வரும் பெயரடைகளான *இனிய* போன்றவை தனித்து வராது பெயர்ச் சொல்லைச் சார்ந்து வருபனவை ஆதலின் ∴புளூம்பீல்டு சொல் வருணனைப்படி அவற்றைச் சொற்களாக் கொள்ள இயலாது வரும் என்கின்றார். கிரீன்பர்க் சொல்லைக் கண்டுகொள்ள ஒரு செயல்முறையைத் தருகிறார். அவர் கருத்துப்படி இந்தச் செயல்முறை சொல்லுக்கான ஒலியனியல் வருணனைக்கும் இலக்கண வருணனைக்கும் இடையிலான முரண்பாட்டை நீக்கும் என்கிறார். அவருடைய முழு வாதத்தையும் இங்கு எடுத்து இயம்புவது கடினம். இருப்பினும் முக்கியமான கருத்துக்களைக் காண்போம். கிரீன்பர்க் உட்கரு (nucleus) என்ற அலகை உருவாக்கி சொல்லை வரையறை செய்கிறார். உட்கரு என்பது நீட்சிக்குட்படாத திரிபு உருபன்களான -ed, -ing போன்றவற்றையும்

செயற்பாட்டுச் சொற்களான the, of போன்றவற்றையும் தனிநிலையான மற்றும் நீட்சிக்குட்பட்ட (ஆக்கம் அல்லது கூட்டாக்கம்) உட்கருக்களான farm-er, kill, ugly, un-love-able போன்றவற்றை உள்ளடக்கும். நீட்சிக்குட்பட்ட உட்கரு பின்வரும் சூழலில் இரண்டோ அதற்கு மேலான உருபுகளைக் கொண்டிருக்கும் மையக்கருத்துவரிசையாகக் (thematic sequence) கருதப்படும்.

1. அது ஒரு உருபன் பதிலீடு வகுப்பை (Morpheme Subsitution Class i.e. MSC) இடப்பெயர்ச்சி செய்யும்.
2. அதில் அடங்கும் உறுப்புகள் இடப்பெயர்ச்சிசெய்யும் உருபன் பதிலீடு வகுப்பின் அங்கமாக வராது.

எடுத்துக்காட்டாக நீட்சிக்குட்பட்ட உட்கருவான duckling என்பது hen, chicken என்பனவற்றை இடம் பெயர்க்கும். ஆனால் அதிலடங்கும் உறுப்புகள் அதே உருபன் பதிலீடு வகுப்பில் அங்கமாக வராது. பின்னர் கிரீன்பர்க் சொல் எல்லையை பெருன்பான்மையான மையங்களை நுழைக்க இயலா உட்கருவின் எல்லையாக வரையறை செய்கிறார். The farmer killed the ugly duckling என்ற வாக்கியத்தில் kill என்ற உட்கருவுக்கும் -ed என்ற உட்கருவுக்கும் இடையில் உட்கருக்களை நுழைக்க இயலாது. ஆனால் பிறவற்றினிடையில் எண்ண்கையிலடங்காதனவற்றை நுழைக்கலாம். சொல் என்பது சொல் எல்லைகளுக்கு உட்பட்ட நீட்சி என்று சொல் அவரால் வரையறை செய்யப்படுகின்றது. தமிழ்ச்சொற்களுக்கு கிரீன்பெர்க்கின் வரையறை பொருத்தமாக இருக்கிறது என்று தெபொமீ கூறுகிறார்.

மேலும் தெபொமீ சொல் எவ்வாறு ஒரு சொல்லனியல் அலகாகப்பரிமளிக்கிறது, பொருளியல் சொல்லாக அங்கிகாரம் பெறுகிறது, தொடரியல் சொல்லாக மிளிர்கிறது என்றெல்லாம் விவரணை செய்கிறார். சொல் அமைப்பியல் அணுகுமுறையை விளக்குகையில் தெபொமீ நிகழிடக்கொள்கை (Contex Theory) வரன்முறை அணுகுமுறை (Distributional Approach) ஆகியவற்றை குறிப்பிட்டு சசூர், ஜெம்செல் (Hjemslev) ஹாரிஸ் (Harris) ஹோனிஸ் வட் (Hoenigs Wald) பிர்த் (Firth) அகியோரின் கருத்துக்களை அலசி ஆய்கிறார். எல்லா நிலைகளிலும் சொல் எவ்வாறு ஓர் அலகாக நிலையாக்கம் பெறுகிறது என்ற தெபொமீயின் ஆய்வு சொல் பற்றிய நம் பல ஐயங்களுக்கு விடை அளிப்பதாக அமைகிறது.

சொல்லமைப்பு

உருபன்களின் வடிவு, உருபன்கள் வருமுறை, உருபன்களால் சொற்கள் அமையும் முறை, உருபன்களின் பாகுபாடு முதலியவற்றை விளக்குவதுதான் உருபனியல் செயல்பாடாய் அமையும். கிரீன்பெர்க் உருபனியல் பற்றி பேசுகையில் சொல்லில் அடங்கும் எல்லா ஒலியன்களையும் உருபுகளில் அடக்கி அவற்றை உருபன்களுக்குத்

தந்து சொல்லை உருபன்களாகப் பிரித்துக் காண்பதுதான் உருபனியல் செயற்பாடு என்பார். அவ்வாறு செய்கையில் ஒரு ஒலியன் கூட உருபனில் அங்கம் பெறாமல் வரலாகாது. மரபிலக்கணங்களும் சொல்லில் வரும் பகுதிகளை பொருள் பொதிந்த பகுதிகளாகப் பிரிப்பதை சொல்லதிகாரத்தின் முக்கியச் செயற்பாடாகக் கொள்கின்றது. மரபிலக்கணங்கள் சொற்களைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பிரிக்கும். அமைப்பு மொழியியல் உருபன்களைக் கண்டறதல் (identification), வகைபடுத்துதல் (classification), அவற்றின் வருகையை (distribution) அறிதல் ஆகிய மூன்று செயல்பாடுகளை உள்ளடக்கியது உருபனியல் என்று விளக்கம் கூறும். உருபனியல் பற்றிய தெபொமீயின் கருத்துக்கள் அவர் எழுதிய History of Tamil Language என்ற நூலில் பரவலாய்க்காணலாம். ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனாய் விளைந்த இந்நூலில் அரிய பெரும் கருத்துகள் பல கூறப்பட்டுள்ளன. அந்நூலின் ஒவ்வொரு வரியும் ஆராய்சியாளர்களின் சிந்தனையைத் தூண்டுவதாய் அமையும் என்று கூறினால் மிகையாகாது. தமிழ் உருபனியல் பற்றிய இவரது கருத்துக்கள் பல இவரது தெளிவான மொழியல் அறிவை வெளிப்படுத்துவதாய் அமையும்.

இலக்கணக் கூறுகளை இவர் பெரும்பாலும் வரலாற்றியல் நோக்கிலேயே ஆய்கிறார். மொழிக் கூறுகளை வரையறை செய்கையில் வரலாற்றுப் பின்னணியலில் பார்க்க வேண்டியதன் இன்றியமையாமை தெபொமீயின் மொழியியல் கருத்துக்களில் வெளிப்படும். ஒட்டு மொத்தமான தெபொமீயின் உருபனியல் கொள்கைகள் மற்றும் கருத்துக்கள் இவர்தம் தமிழ் மொழியல் ஆய்வில் வெளிப்படும் என்றாலும், ஆழ்ந்த ஆய்வுசெய்ய காலம் இல்லாமையால் ஆங்காங்கே இவ்வான்றோர் அள்ளித்தெளித்துச் சென்ற கருத்துக்களை நாங்கள் பட்டியலிட முயன்றுள்ளோம்.

இலக்கண வகைப்பாடு

தொல்காப்பிய உருபனியலை விளக்குகையில் பெபொமீ பெயருக்கும் வினைக்கும் உள்ள உருபனியல் அடிப்படையான வேறுபாடுகளை பட்டியலிட்டுக்காட்டி விளக்குகிறார். பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்பன என்றும் எழுவாயாக வருவன என்றும் வினைகள் வேற்றுமை உருபு ஏற்காதன என்றும் பயனிலையாக வருவன என்றும் வெளிப்படையாகவோ உட்படையாகவோ காலத்தைச் சுமப்பன என்றும் வரையறை செய்கிறார். பெயர் எழுவாயாகவும் பயனிலையாகவும் செயல்படுவதைச் சுட்டிக்காட்டிப் பயனிலைப் பெயரை எழுவாய்ப் பெயரினின்றும் வேறுபடுத்த ஆழ்நிலை இலக்கண அமைப்பில் இணைப்பு வினை (copula) இருப்பதாய்க் கருதலாம் எனக் குறிப்பிடுகிறார்.

வினைகள் தெரிநிலை வினை என்றும் குறிப்பு வினை என்றும் தொல்காப்பியரால் பாகுபாடு செய்யப்படுவதைச் சுட்டிக்காட்டி விளக்குகையில் தெபொமீ குறிப்பு வினை முற்றிற்கும் குறிப்பு வினையடிப் பெயருக்கும் உள்ள வேறுபாட்டை பின்வருமாறு

விளக்குகிறார். குறிப்பு வினைமுற்றில் வினைமுற்றுருபு நேரடியாக வினை வேருடன் சேருகிறது (எ.கா. *நல் + அள் > நல்லள்*) ஆனால் குறிப்பு வினையடிப் பெயராக்கத்தில் பெயரொட்டு பெயரெச்ச வடிவுடன் இணைகின்றது (எ.கா. *நல்ல + அள் > நல்லாள்/நல்லவள்*).

செயப்படுபொருள் குன்றிய வினைக்கும் குன்றா வினைக்கும் உள்ள வேறுபாடு தொடரியல் அடிப்படையில் அமைந்தது என்று குறிப்பிட்டு, தன்வினை பிறவினை என்பன தவறாக முறையே intransitive, transitive என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார். தன்வினை பிறவினை என்பனவற்றிற்கு நிகராக இவர் தரும் ஆங்கிலச் சொற்கள் முறையே ergative verb, non-ertative verb என்பனவாகும்.

துணை வினைகள் புதிய பொருள்கள் தரப் பயன்படுத்தப்படுவதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறார். *கொள், கொடு, அருள்* என்பன துணைவினைகளாக வந்து செயற்பாட்டுப்பொருள், தற்சுட்டுப்பொருள் போன்றவற்றைத் தருவதைச் சுட்டிக்காட்டி விளக்குகிறார்.

செய்யும், செய்த, செய்யாத ஆகிய வாய்பாட்டு கிளவிகளை பெயரெச்சம் என்று மரபிலக்கணங்கள் குறிப்பிடும். பெயரெச்சம் பற்றி கூறுகையில் (1965:46) இவர் *அ* என்பதை பெயரெச்ச ஒட்டு என்று கூறி இவ்வொட்டு பெற்று வரும் வினை பெயரடையாக மட்டுமன்றி பெயரடைத் தொடர் (relative clause) போல செயற்பட்டு வினையின் பண்பான எழுவாய், பயனிலை ஏற்று வருதலை வெளிப்படுத்தும் என்று விவரிப்பது தொடரியல் அடிப்படையில் மிக முக்கியமான ஓர் கருத்தாகும். சில ஒட்டுகள் வினையுடன் சேர்ந்து சொற்களை ஆக்கும். அவ்வாறு ஆக்கப்பெறும் சொற்கள் வினையின் பண்பினைப் பாரம்பரியப் பண்பாகப் பெற்றுக்கொண்டு வினையின் தொடரியல் அமைப்பை வெளிப்படுத்தும். சில ஒட்டுகள் அவ்வாறின்றி வினையின் பாரம்பரியப் பண்புகளைப் பெறாது வரும். பெயரெச்ச ஒட்டு வினையின் பண்புகளை உரிமையாகப் பெறுவதால் பெயரெச்ச வடிவு வினையின் திரிபுவடிவாகக் கருதப்படுவதாகத் தெபொமீ கூறிச்செல்கிறார்.

வினையெச்சம் பற்றி கூறுகையில் இவர் வினையெச்ச உருபை (1965:154) இணைக்கும் இடைச்சொல் எனக் குறிப்பிடுகிறார்.

உருபன்களை வேர் உருபன் வேரில்லா உருபன் எனப் பிரித்து வேரில்லா உருபன்களின் கீழ் கால உருபுகள், வேற்றுமை உருபுகள், ஒப்புமை இடைச்சொற்கள், அவைநிலை, இவைநிலை, சாரியை ஆகியவற்றை அடக்குகின்றார்.

சாரியைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவை தற்போதைய மொழியில் அவை பெரும்பாலும் பெயர்களுக்கும் வேற்றுமை உருபுகளுக்கும் இடையில் வருவதைக்

குறிப்பிட்டு சாரியை என்பது பழைய வேற்றுமை உருபுகளாகவோ அல்லது சொல்லிறுதி ஒட்டுகளாகவோ வந்திருக்கக் கூடும் என்கிறார்.

கூட்டுச்சொற்கள்

கூட்டுச்சொற்கள் பற்றி குறிப்பிடுகையில் (1965:96) தொல்காப்பியத்தில் இரண்டு முக்கியமான கூட்டுச்சொற்கள் இருப்பதைக் குறிப்பிடுகிறார்.

1. வேற்றுமைத் தொகைக் கூட்டுகள் (Declensional compounds)
2. வேற்றுமைத் தொகையல்லாக் கூட்டுகள் (Non-Declesional compounds)

வேற்றுமை உருபுகள் வருவதாக எடுத்துக்கொள்ளப்படும் கூட்டுச் சொற்கள் முதல் வகையிலும் உம்மைத்தொகைக் கூட்டுகள் (எ.கா. *இராப்பகல்*), உவமைத்தெகைக் கூட்டுகள் (எ.கா.*மதிமுகம்* 'மதிபோன்ற முகம்'), பண்புத்தொகைக் கூட்டுகள் (எ.கா. *செங்குதிரை*), வினைத்தொகைக் கூட்டுகள் (எ.கா. *கொல்யானை*) அன்மொழித்தொகைக் கூட்டுகள் (எ.கா. *மதிமுகம்* 'மதிமுகம் கொண்டவர்') என்பனவற்றை இரண்டாம் வகையிலும் அடக்குகிறார். உம்மைத்தொகை தவிர்த்த பிற கூட்டுகளை அடைக் கட்டுமானத்தில் (attributive constuction) அடக்குகிறார். அவர் பின்னர் கூட்டுகளை ஒவ்வொன்றாய் விளக்குகிறார். வேற்றுமைத்தொகைப் பின்னால் ஏற்பட்ட மாறுதல்களால்தான் அவ்வாறு அழைக்கப்பட்டதாகவும் வேற்றுமைத்தொகை ஒரு அடைக்கட்டுமானம் என்றும் கூறுகிறார். பண்புத்தொகைக் கூட்டின் முதல் சொல் ஒரு வேர் என்றும் வேற்றுமைத்தொகையில் அது பெயர் என்றும் விளக்குகிறார். உவமைத்தொகை ஒரு செயப்படுபொருள் வேற்றுமைக் கூட்டு என்று கூறி வேற்றுமைத் தொகை அதன் முக்கியத்துவம் கருதித் தனியாகப் பேசப்படுகிறது என்கிறார். சமநிலைக் கட்டுமானத்தை (coordiante construction) வெளிப்படுத்தும் உம்மைத்தொகையைப் பிரித்து விட்டால் நாம் பிற வேற்றுமைகளை பயனிலைக் கட்டுமானத்திற்கு (predicate constuction) நேர் எதிரான அடைக்கட்டுமானமாகக் கருதலாம் என்கிறார். வினைத்தொகையில் வினை வேர் முதல் சொல்லாக வருகிறது என்று அறிவுறுத்தி அவை பெயர் முதலாக வரும் கூட்டுகளிலிருந்து வேறுபடுவதை நினைவூட்டுகிறார். வேற்றுமைத் தொகைக் கூட்டுகளைப் பற்றி பேசுகையில் தெபொமீ சேனாவரையரைச் சுட்டிக்காட்டி வேற்றுமைத்தொகைக் கூட்டுகள் வேற்றுமை உருபுகள் தொக்கிநிற்பதை உணர்த்தவில்லை என்றும் குறிப்பிட்ட பொருள் தருவதற்கு வேண்டி வேற்றுமை உருபுகள் பின்னர் தோன்றின என்றும் தன் கருத்தை வெளியிடுகிறார். இந்த மாற்றத்தை கூட்டிணைப்பு நிலையிலிருந்து பகுநிலைக்குச் சென்ற மொழி மாற்றமாக் கொள்கிறார். வேற்றுமைத்தொகைக் கட்டுமானத்தில் வந்த வேறுபட்ட இடைச்சொற்கள் வேறுபட்ட வேற்றுமை உருபுகளாகப் பரிமளித்தன என்கிறார்.

இன்னின்ன உருபுகள் அல்லது/மற்றும் தொடர்கள் தொக்கிநின்று இத்தகைய கூட்டுச் சொற்கள் உருவாகின்றன என்று முன்கூட்டியே கூற இயலாது. பொருளைப் புரிந்து கொள்ளும் குறிப்புணர்வை வளர்ப்பதில் சொல்லாக்க முறைகள் தூண்டலாக அல்லது செயலாக்கிகளாகச் செயல்படுகின்றன. பொருளை உணர்த்தலே கூட்டாக்கத்தின் முதன்மையான நோக்கம். பொருளை உணாத்துவதற்காகச் சொற்கள் சேர்ந்து நிலைபெறுதல் முதன்மையான நிலை. சேர்ந்து நிலையாக்கம் பெற்ற கூட்டுச் சொற்கள் உருவாக்கம் பெற்ற பின்னர் ஒரே அமைப்பின் பின்னணியல் உருவாகிய கூட்டுச் சொற்களை ஒருங்கிணைத்து அவை எத்தகைய பொருளில் எத்தகைய உருபுகளை மற்றும் தொடர்களை உள்ளடக்கி ஒன்றுபட்டு வருகின்றன என்று ஆய்வது இரண்டாம் நிலை. மொழியின் வளர்ச்சியால் மொழியைப் பயன்படுத்துவோர் சிந்தனை ஆற்றலால் கூட்டுச்சொற்கள் உருவாகின்றன. இவற்றை ஆய்ந்து வகைப் படுத்துவது மொழியிலார் கடமையாகின்றது. ஆனால் கூட்டாக்கம் இவ்வகைப்படுத்தலுக்காகக் காத்திருப்பதில்லை. தெபொமீயின் கூட்டாக்கம் பற்றிய கருத்துக்களை ஆயும்போது நமக்கு இத்தகைய சிந்தனைகள் வளர்கின்றன.

தெபொமீ பெயர் கூட்டுகள் மட்டுமன்றி வினைகளும் கூட்டுகளாக வருவதை சேனாவரையர் எடுத்தியம்புவதாகக் கூறி *தலைப்பது, இடைப்பது, கடைப்பது* என்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார்.

உருபனியல் அன்றும் இன்றும்

அமைப்பு மொழியில் காலத்தில் உருபனியல் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. உருபனியல் கோட்பாடுகள் மற்றும் உருபனியல் ஆய்வுநெறிகளும் அலசி ஆராயப்பெற்றன. புதிய மொழிகளின் இலக்கணக் கூறுகளைக் அறிந்துகொள்ள தரவுகள் சேகரித்து அதை ஆய்வதன் கட்டாயத்தில் இருந்தமையால் உருபனியல் ஆய்வு தரவுகளை ஆய்ந்து உருபன்களைக் கண்டறிந்து அவற்றின் வருகை முறைகளைத் தருதல் என்ற நிலையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. மொழியியல் பட்டப்படிப்பில் கள ஆய்வுக்கு முக்கியத்துவத்துவம் தரப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு உருபனியல் கோட்பாட்டு நெறிமுறைகளின் மூலம் உருபனியல் ஆய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் உருபனியல் ஆய்வு வர்ணனை மொழியியலாகக் கருதப்பெற்றது. சாம்ஸ்கியின் வரவின் விளைவால் தொடரியலுக்கு முக்கியத்துவம் தரப்பட்டதன் காரணமாய் உருபனியல் ஒதுக்கப்பட்டு பின்தங்கியிருந்தது. மீண்டும் சாம்ஸ்கியின் Remarks on Nominalization என்ற கட்டுரையின் பின்விளைவால் உருபனியல் ஆய்வுகள் புத்துணர்ச்சி அடைந்து வர்ணனை உருபனியலாக சொற்களில் வரும் உருபன்களின் அமைப்பு மற்றும் வருகை முறை இவற்றில் தன் கவனத்தை செலுத்திய ஆய்வு சொற்களை ஆக்கங்களாகக் கொண்டு அவ்வாக்கங்களுக்கு சொல்லாக்க விதிகள் தரும் வழியில் ஆக்கமுறை உருபனியலாக மாற்றம் பெற்றது. புணர்ச்சிவிதிகள் ஆய்வும் பலமாற்றங்களை அடைந்து சொல்லன் ஒலியனியல் என்ற பெயரிலி அமைந்த

புதிய கோட்பாடுகள் வழி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றது. உருபனியல் ஆய்வு உருபன்களை குறுகிய அலகாகக் கொள்ளாமல் சொல்லை அடிப்படையலகாகக் கொண்டு சொல்லின பகுதிகளைக் கொண்டு சொல்லாக்க விதிகள் மூலம் சொல்லாக்கம் நடைபெறுவதை விளக்குவதாகத் தற்போது பரிமளத்து வருகின்றது. இவ்வாய்வு சொல் திரிபுக்கும் அக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை புரக்கணிப்பதாக அமைகின்றது.

இறுதி

தெபொமீ தமிழ் மொழியியலின் தந்தையாக இருந்து தமிழ் மொழியை அலசி ஆய்ந்து அரிய பெரும் கருத்துக்களை தந்துள்ளார். அவர் எழுதிய ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு கட்டுரைகளும் ஆராய்சித் தலைப்பாக எடுத்துக்கொண்டு ஆயத்தக்கன. இக்கட்டுரையில் உருபனியல் பற்றிய அவர் கருத்துக்கள் முழுவதும் ஆயப்படவில்லை என்பது வெள்ளிடைமலை. அவர் படைப்புகள் மேலும் ஆழ்ந்து ஆய்வுசெய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் உருபனியல் பற்றிய தெபொமீன் பார்வையை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலும் என்ற தான் இக்கட்டுரையின் முடிவாக அமையும்.

Reference

Meenakshisundram, T.P. 1962. Spoken Word.
Meenakshisundaram. T.P. 1965. History of Tamil Language. Poona: Deccan College.